மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்
நீ.ம. எண்.19/2019
மசா.1

பெயர் :-் செல்வராஜ் தேதி. 27.07.2021

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின்படி 2021 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் தேதி 27.07.2021 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் குடியிருக்கும் கடைக்கு மாதம் ரு.1000 வாடகை தொகையாகும். இதனை நான் கடந்த 2014ம் தேதியிலிருந்து செலுத்தவில்லை என்றால் 2016 வரை கட்டி விட்டேன். சமரச தீர்ப்பானை பிறப்பிக்கப்பட்டதின் படி 2 மாத காலகெடுவிற்குள் கடையினை காலி செய்து ஒப்படைக்கவேண்டுமென்று ஒப்பு கொண்டேன் என்றால் சரிதான். நான் சமரச ப்படை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். ஒப்படைப்பதாக நான் ஏதுவும் எழுதி கொடுக்கவில்லை. நான் சாவியினை ஜமாத்தில் ஒப்படைத்தேன். மற்ற கடைகள் காலி செய்யாத காரணத்தால் என்னை ஜமாத் தலைவர் என்னை கடையினை நடத்த சொன்னதால் கடையினை நடத்தினேன். ஜமாத் தலைவரிடம் வழக்கு தீர்ப்பு குறித்து எழுதி எதுவும் வாங்கவில்லை. மற்ற கடைக்காரர் கடந்த 2019ம் வருடத்தில் காலி செய்தார்கள் என்றால் சரிதான். மற்ற கடைக்காரர்களுக்கு வழக்கு ஏதாவது நிலுவையிலிருந்ததா என்றால் இல்லை. ஆனால் காவல் நிலையத்தில் வழக்கு இருந்தததது. சமரச தீர்ப்பானையின்படி நான் செலுத்த வேண்டிய ரு. 1,25,000 த்தினை நான் செலுத்தி விட்டோனா என்றால் டிடி எடுத்து அனுப்பினேன். டிடி எந்த தேதியில் எங்கு அனுப்பினேன் என்றால் 2017ம் வருடத்தில் பள்ளிவாசலுக்கு அனுப்பினேன். கடந்த 2017ம் வருடத்தில் டிடி ல் உள்ள பணத்தினை நான் திரும்ப அப்படியே எனது கணக்கில்

வைத்துள்ளேன். நான் 2017ம் வருடத்தில் எந்த தொகையும் நான் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் அந்த சமயத்தில் நான் உடல் நிலை சரியில்லை. கடந்த 2017ம் வருடத்தில் நான் ஏற்கனவே செலுத்திருந்த தொகை ரு. 2 லட்சத்தில் ரு. 50,000 திரும்ப பெற்றுகொண்டேன் என்றால் சரிதான். கடந்த 2016ம் வருடத்தில் வாடகை தொகை செலுத்தினேனா என்றால் இருப்பு தொகையிலிருந்து பணத்தினை எடுத்து கொண்டார்கள். கடந்த 2019ம் வருடத்தில் நான் வாடகை செலுதத்தினேனா என்றால் செலுத்தவில்லை. வாடகை என்னிடம் கேட்கவில்லை. என்னிடம் இருந்து வாடகை வேண்டாம் என நான் காலி செய்யும் வரை சமரச தீர்ப்பானையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சமரச தீர்ப்பானையின் படி நான் காலி செய்திலிருந்தால் ஜமாத்தில் 2016ம் ஆண்டிலிருந்து 2019க்குள் கட்டிடம் கட்டி இருப்பார்கள் என்றால் நான் கடந்த 2019ம் வருடத்தில் காலி செய்துவிட்டேன். நான் கடையினை காலி செய்யாத காரணத்தால் ஜமாத்தில் வேலை செய்ய முடியாமல் போனது என்றால் நான் கடையினை காலி செய்துவிட்டேன். பாக்கி வாடகை தொகையினை செலுத்த நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்தேனா என்றால் சலான் மட்டுமே கொடுத்தேன். சமரச தீர்ப்பானையின் நிபந்தனையினை நிறைவேற்றாத நான் தற்போது சமரச தீர்ப்பானை படி நடந்து கொள்ள சொல்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. கடந்த 2016ம் வருடத்தில் பாக்கி தொகையினை செலுத்தியதை நான் எனது மருத்துவமனை செலவிற்க்காக திரும்ப பெற்று கொண்டேன் என்றால் ரு. 50,000 மட்டுமே திரும்ப பெற்றேன். ஜமாத்திற்கு என்னால் கட்டுமான செலவு அதிகமாக ஏற்பட்டது என்றால் அவ்வாறு இல்லை. நான் சொல்வது போல் பள்ளிவாசலில் பிறகு கடையை ஒப்படையுங்கள் என்று சொல்லவில்லை என்றால்சரியல்ல. அதனால் தான் பள்ளிவாசலில் வாடகையை தொகையை களித்து கொண்டு பாக்கி பணத்தை அனுப்பிவிட்டார்கள் என்றால் நான் வாங்கவில்லை வழக்கறிஞரிடம் தான் உள்ளது. நான் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கவில்லை என்றால் சரியல்ல.